அடையாள இலக்கம்:

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2013

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

அடிப்படை எழுத்தறிவுப் போட்டி

(ACT, QLD, WA, Wellington இல் மட்டும்)

**<u>மாதிரி வினாத்தாள் 2013</u>**

# அதிமேற் பிரிவு

(12 – 14 வயதுப் பிரிவு)

நேரம்: 2 மணி

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாக 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | |

**(அ) கோடிட்ட இடங்களுக்குப் பொருத்தமான ஓர் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (10 புள்ளிகள்)

1) என் தம்பி வளர்க்கும் ______________________ உணவு கொடுக்க வேண்டும்.
அ) மீனை ஆ) மீன் இ) மீனா ஈ) மீனுக்கு

2) பயணிகள் ______________________ நோக்கி ஓடுகிறார்கள்.
அ) பேருந்தில் ஆ) பேருந்தை
இ) பேருந்திலிருந்து ஈ) பேருந்துக்கு

3) என் ______________________ விளையாடுவது யார்?
அ) தங்கையோடு ஆ) தங்கையை
இ) தங்கையுடைய ஈ) தங்கைக்கு

4) ஓவியக் கண்காட்சியை ______________________ பார்க்க முடிந்ததா?
அ) உன்னை ஆ) உன்னால் இ) உன் ஈ) உன்னுடன்

5) நான் நாள் தோறும் ______________________ பாடசாலைக்கு நடந்து செல்வேன்.
அ) வீட்டுக்கு ஆ) வீட்டில்
இ) வீட்டிலிருந்து ஈ) வீட்டோடு

| புள்ளிகள் | |
|---|---|

**(ஆ) கீழேயுள்ள வாக்கியங்களில் கோடிட்ட வினைச்சொல் ஒவ்வொன்றின் காலத்தையும் மாற்றி எழுவாய் பயனிலை பொருந்துமாறு அதன் அடியிலுள்ள வாக்கியத்தை நிரப்புக.** (15 புள்ளிகள்)

1) நேற்று நான் என் நண்பன் வீட்டில் காலை உணவு உண்டேன்.

இப்பொழுது நாங்கள் எமது வீட்டில் உணவு ____________________.

2) கலை விழாவில் மாணவர்கள் பங்குபற்றுவார்கள். நேற்றைய கலை விழாவில் மாணவர்கள் ________________________________.

3) வெடிச்சத்தம் கேட்டால் சிறுவர்கள் பயப்படுவர்.

சென்ற வாரம் வெடிச்சத்தம் கேட்டுச் சிறுவன் __________________.

4) நாளை தங்கை அரங்கில் ஆடுவாள்.

சென்ற வருடம் நான் அரங்கில் ___________________________.

5) நேற்று அவர் என்ன செய்தார்?

நாளை நீங்கள் என்ன ____________________________?

| புள்ளிகள் | |
|---|---|

**(இ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.** (10 புள்ளிகள்)

(1) திரை + உலகம் = ____________________________

(2) பூ + தோட்டம் = ____________________________

(3) செலவு + ஆயிற்று = ____________________________

(4) கடல் + உணவு = ____________________________

(5) வகுப்பு + அறை = ____________________________

| புள்ளிகள் | |
|---|---|

**(ஈ) பின்வரும் சொற்களைப் பொருத்தமான இடங்களில் எழுதுக.**

(10 புள்ளிகள்)

**ஆண்டு / திங்கள் / மணம் / தட்டு / ஆறு / ஏழு / கல் / விளக்கு / மாலை / கூறு.**

(1) இன்று தெரு ______________________ எரியவில்லை.

(2) அரசர் ஒருவர் நேபாள தேசத்தை ____________________ வருகின்றார்.

(3) மலையில் ____________________ உற்பத்தியாகும்.

(4) வெள்ளித் __________________ நிறைய லட்டு இருக்கின்றது.

(5) நீ கற்ற பழமொழியின் பொருளை __________________.

(6) ஔவையார் இளமையில் __________________ என்றார்.

(7) மல்லிகை _________________ கமழ்கிறது.

(8) மாணவர்கள்_______________பொழுதில் கால்பந்து விளையாடினார்கள்

(9) எங்கள் வீட்டின் எண் ____________________.

(10) நான் சென்ற __________________ கிழமை பாடசாலை செல்லவில்லை.

| புள்ளிகள் | |
|---|---|

**(உ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.** (10 புள்ளிகள்)

(1) கூறிச்சென்றான் = ____________________ + ____________________

(2) மாங்கன்று = ____________________ + ____________________

(3) பசளையிட்டு = ____________________ + ____________________

(4) இறுதிக்காலம் = ____________________ + ____________________

(5) இரண்டாண்டுகள் = ____________________ + ____________________

| புள்ளிகள் | |
|---|---|

**(ஊ) எதிர்ப் பொருள் தரும் சொல்லை எழுதுக.** (10 புள்ளிகள்)

(1) அநீதி - ____________________

(2) இலகு - ____________________

(3) குறை - ____________________

(4) வரவு - ____________________

(5) எதிரி - ____________________

(6) மேடு - ____________________

(7) சண்டை - ____________________

(8) உண்மை - ____________________

(9) அருகில் - ____________________

(10) அகம் - ____________________

| புள்ளிகள் | |
|---|---|

**(எ) படங்களைக் கவனமாகப் பார்க்கவும். கருத்தை விளங்கிக் கொள்ளவும். 10 வாக்கியங்கள் எழுதவும். கீழே கொடுக்கப்பட்ட சொற்களைப் பயன்படுத்தலாம்.** (20 புள்ளிகள்)




1. பேருந்து நிற்குமிடம் 2. மோதியது 3. பயணிகள்

4. காயமடைந்தனர் 5. வழிப்போக்கர் 6.காப்பாற்றினர்

7. சிகிச்சை அளித்தனர் 8. தெரியப்படுத்தினர் 9. முதலுதவி வண்டி

10. விபத்து மற்றும் அவசரப் பிரிவு.

**1.** ______________________________________________

______________________________________________

**2.** ______________________________________________

______________________________________________

**3.** ____________________________________________

____________________________________________

**4.** ____________________________________________

____________________________________________

**5.** ____________________________________________

____________________________________________

**6.** ____________________________________________

____________________________________________

**7.** ____________________________________________

____________________________________________

**8.** ____________________________________________

____________________________________________

**9.** ____________________________________________

____________________________________________

**10.** ____________________________________________

____________________________________________

| புள்ளிகள் | |
|---|---|

**(ஏ) சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.** (15 புள்ளிகள்)

(1) தமிழ் மொளி / தமிழ் மெழி / தமிழ் மொழி / தமிள் மொழி

(2) பாடசலை / பாடசாலை / பாடச்சாலை / பாடசாலையி

(3) தொலைகாட்சி / தொலைக்கட்சி / தெலைகாட்சி / தொலைக்காட்சி

(4) கலை விழா / கலை விழ / கலை விளா / காலை வளா

(5) திரக்குறழ் / திருக்குறள் / திருகுறள் / திருக்குறழ்

| புள்ளிகள் | |
|---|---|